# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 140/ந/2018**

**நாள் : 24/09/2018**

**22.06.2018 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி** – **முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.**

**நகராட்சி ஆணையாளர்,**
**ஆவடி நகராட்சி,**
**ஆவடி.** – **எதிர் மனுதாரர்**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி, ஜே.பி. எஸ்டேட், 21–வது தெருவில், மேம்படுத்தப்பட்ட சாலை சிதிலமடைந்தது குறித்து 'ஒரே மாதத்தில் சாலை, 'டேமேஜ்', ஒப்பந்ததாரரின் சிறப்பான பணி' என்று நகைப்பிட்டு 22.06.2018 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை முறையீட்டு மனுவாகக் கருதப்பட்டு 140/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. ஆவடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சிப் பொறியாளர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

ஆவடி நகராட்சி, வார்டு எண்.17, ஜே.பி. எஸ்டேட் பகுதியில் அமைந்துள்ள 21–வது சாலை அப்பகுதியின் 3–வது தெருவிற்கு இணைப்புச் சாலையாக உள்ளது என்றும், புதியதாக அமைக்கப்பட்ட தார்சாலையிலிருந்து 40 மெட்ரிக் டன் எடையுள்ள கனரக வாகனம் 3–வது குறுக்குத் தெருவில் செல்ல முயன்ற பொழுது முன்னோக்கிச் செல்ல முடியாமல், 21–வது ஜே.பி. சாலையில் முன்னும் பின்னும் கனரக வாகனம் சென்றதால் அவ்வாகனத்தின் சக்கர சுவடுகள் புதியதாக அமைக்கப்பட்ட தார்சாலையில் பதிந்து சாலை சீர்கெட்டுவிட்டது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனினும், பழுதடைந்த சாலை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரராலேயே சீர்செய்து தரப்பட்டுவிட்டது என்று தெரிவித்து புகைப்பட நகல்களை சமர்ப்பித்துள்ளார்.

2. நகராட்சிப் பொறியாளரிடம் 18.09.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 680 மீட்டர் நீள இச்சாலை ரூ. 47 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டதென்றும், சீரமைத்த சாலையின் அளவுகளை தானும், உதவிப் பொறியாளரும் சரி பார்த்தபோது சரியாகவே இருந்தது என்று விசாரணையின்போது நகராட்சிப் பொறியாளர் தெரிவித்தார். சீர்கெட்ட சாலையினை, சாலை அமைத்த பொறியாளரே அவரது செலவில் சீரமைத்து தந்தார் என்றும் நகராட்சிக்கு நிதிச் செலவு எதுவும் இல்லை என்றும் பொறியாளர் தெரிவித்தார்.

3. ஆவடி நகராட்சி, 17–வது வார்டு, ஜே.பி. எஸ்டேட், புதிதாக மேம்படுத்தப்பட்ட 21–வது தெரு சாலையில் கனரக வாகனம் முன்னோக்கி செல்ல இயலாமல் முன்னும் பின்னும் சென்றதால் புதிதாக அமைக்கப்பட்ட சாலையில் கனரக வாகன சக்கரச் சுவடுகள் பதிந்து சேதமாகி உள்ளது என அறிய முடிகிறது. எனினும், சேதமடைந்த சாலையினை நகராட்சி நிதி செலவின்றி, ஒப்பந்ததாரரே அவரது செலவில் சாலையை சீரமைத்து கொடுத்துள்ளார். எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. எனினும் எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளை எதிர்பார்த்து உரிய முறையில் சாலைகள் அமைக்கப்படுகின்றதா என்பதை கண்காணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

1.10.18

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
ஆவடி,
சென்னை – 600 054..

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்